# இந்து சாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத் - சூரு] யாழ்ப்பாணம்:- நந்தன ஞு வைகாசிமீ ௩௧௳ வெள்ளிக்கிழமை (13 June 1952) [இல - உக]


# அறமும் மறமும் கடந்த அரன் அன்பு

## குருவடிவர் கொண்டு - - - - பொழிந்த கருணை

உயிர்த் தோற்றங்களும், தம்முளடங்கி யுள்ள எண்ணிறந்த சீவராசிகளால் இயக்கப்படுவது எவரும் அறிந்த உண்மை. தோற்றங்களில் அந்த மாயமதனில், அவை மேலோங்கி வளர்ந்து உயர்தி பெறுவதும் பிரத்தியட்சமானது. மனிதனுளடங்கி அவனை இயக்கும் அனந்த சக்திகளுள், முக்கியத்துவமானது அன்பு. அன்பின் சக்தியினாலேயே அண்டசராசரங்களும் அகில உலகங்களும் இயங்குகின்றன. படைத்தல் காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களும், வரம்பிகந்த பேரன்பில் இயக்கத்தினாலேயே நடைபெறுகின்றன.

தம்முளடங்கித் தம்மை இயக்கி நிற்கும் அன்பின் வியாபகமாக இறைவை உணர்ந்து, அன்பு மயமானவரே மெய்ஞ்ஞானிகளானவரும். மனிதன் தன்னுளடங்கிக் கிடக்கும், அன்பின் சக்தியைத் தட்டி எழுப்பித், தன்னலமற்று வாழும் உண்மை ஒழுக்கமே சமய வாழ்வாகும். தன்னலமற்ற என்பும் பிறர்க்குரியராய்ப் பயன்படும் கருணையையே அன்பெனக் குறித்தனர் அறிவின் பெரியார். உண்மை அன்பு சர்வ சீவராசிகளையும் வசீகரிக்கும் ஆற்றல் வாய்ந்தது. அன்புருவாய் விளக்கமடைவதே கடவுள் நெறி. இந்நெறியில் ஆன்ம அறிவை ஒன்றுவிக்கும் சாதனங்களே சமயக் கொள்கைகள், சமய அனுஷ்டானங்களனைத்தும்.

அன்பின் முதிர்ச்சி, மெய்யன்பரை அனைத்துயிர்க்கும் தாயாக்கி விடுகின்றது. எவர் ஒருவர் உலகின் தாய்மைஸ்தானத்தை அடைகின்றாரோ, எவர் ஒருவர் மற்றையோரின் இன்ப துன்பங்களைத் தனதாக உணருகின்றாரோ, அவர் கடவுட் கருணையினராய், பிறப்பினின்றும் விடுதலை பெற்ற பேருளராகின்றார். சுயநலப் பற்றினுற் தானெனத் தடித்து நின்ற இயங்கிய உயிரறிவு, முதிர்ந்து மேலோங்கிய அன்பின் சக்தியால், அனைத்துமாய் வியாபித்து நிறைவடைகின்றது. அன்பின் வியாபக நிறைவில், மனிதன் இதுவரை தன்னைப் பந்தித்தத், தோற்ற மரணங்கட்குள்ளாக்கிய, எல்லாப் பந்த பாசங்களினின்றும் விடுதலை பெற்றுக் கடவுள்மயமாகின்றான்.

### தன்னலமின்மை

தன்னலமற்ற உண்மையன்பின் வளர்ச்சியில் சாதிமத பேத சச்சரவுகள் இடம் பெறுவதில்லை. அது பேத அபேதங்கள் கடந்தது. நன்றுந் தீதுமகடும் மனம் பொறி

**************************

### சிவதொண்டன்

**************************

புலன்கட்கப்பாற்பட்டது. அறத்தின்வழியும் மறத்தின் வழியும் உயிர்கல மோம்புவது. அறம் மறம் என இரண்டுபட்ட பேத பாகுபாடு அதற்கில்லை. உயிர்கலமொன்றே உண்மை அன்பின் துடிப்பாகும்.

"அறத்திற்கே அன்பு
சார்பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணை"

எனத் தெய்வப் புலவர், அறம் மறம் ஆகிய இரண்டின் நிகழ்வும் அன்பின் இடமாகவே நிகழ்வதை உணர்த்துகின்றார்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## பலி நிறுத்தம்

காக்கேயன்துறை வைரவ கோயிலில் ஆடுகோழி பலியிடுதல் இவ்வாண்டு நிறுத்தப்பெற்றிருக்கிறது.

## திருக் கேதீச்சுவரத் திருப்பணி ஆரம்பம்

சென்ற வைகாசிமீ ௧௬௳ (29-5-52) வியாழக்கிழமை மாலை 6 மணி வரை, பம்பலப்பிட்டிப் பழைய கதிரேசன் கோவில் மண்டபத்தில், ஸேர், க. வைத்தியநாதனவர்கள் தலைமையிற் கூடிய திருக்கேதீச்சரத் திருப்பணி புனருத்தாரண சபைக் கூட்டத்தில், சர்வசம்மதமாக நிறைவேற்றப்பெற்ற நிர்ணயத்தின் பிரகாரம், இந்த வைகாசிமீ 31௳ (13-6-52) வெள்ளிக்கிழமை உதயாதி 6 மணிக்கு மேல் நிகழும் சுப மூகூர்த்தத்தில் மேற்படி ஆலயப் புனருத்தாரணத்திற்காகிய ஆரம்ப கிரியைகளாகிய விநாயக பூசை, அநுக்ஞை முதலான வழிபாடுகள் செய்து புநருத்தாரணஞ் செய்வதற்கான கிரியைகள், கௌரி நாயகியம்பாள் சமேத திருக்கேதீசுவர சுவாமி திருவருள் முன்னிட்டுத் தொடங்கி நடைபெறுமென மேற்படி ஆலயத் திருப்பணிச்சபைக் கௌரவ காரியதரிசி தெரிவிக்கின்றார்.

ஷை திருப்பணிச் சபைக் காரியதரிசி.

உ

## நல்லகவிளக்கது நமச்சிவாயவே

இல்லகவிளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

## இரண்டாவது அரசாங்க வைத்தியக் கல்லூரி

கொழும்பிலிருக்கின்ற அரசாங்க வைத்தியக் கல்லூரியிலிருந்து வெளிவரும் வைத்தியர் தொகை போதாமலிருப்பதால் மற்றொரு வைத்திய கல்லூரியைப் பேராதனைச் சர்வகலாசாலை நிலையத்தில் காலதாமதமின்றி யமைப்பதற்குச் சுகாதார மந்திரி திரு. E. A. நுகவெல அவர்கள் முயலுகின்றனரென அறிய வருகிறது.

இதற்கு சேர் ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களுடைய பேராதரவுண்டாம்.

## சமாதான நீதவான்

திரு. R. P. S. இராசகுரிய அவர்களுக்குச் சிலாங்கூர் அரசாங்கம் சமாதானநீதவான் பட்டங் கொடுத்திருக்கிறது.

இவர் ஒரு உயர்தர வியாபாரியாயிருப்பதோடு கோலாலம்பூர் இலங்கையர் சபைத் தலைவராயிருக்கிறார். விளையாட்டுத் துறைகளில் விசேஷ சித்தியுடையவர், உள்நாட்டு அரசாங்கத் துறையிலும் பெருந் தொண்டாற்றியிருக்கிறார்.

# சத்தியாக்கிரகிகள் அப்புறப்படுத்தப்பட்டனர்!

சென்ற திங்கட்கிழமை காலை 9-15 மணி வரையில் பிரதிநிதிகள்சபைக்கு இலங்கை இந்திய மகாநாட்டார் தங்கள் குறைகளை முறையிடும்படி சென்றபொழுது நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிக் கோப்பாய்ப்பகுதிப் பிரதிநிதி திருவாளர் கு. வன்னியசிங்கம் M. P. அவர்களுக்குப் பின்வருமாறு இலங்கைஇந்தியன் காங்கிரஸ்சத்தியாக்கிரக சபையார் தந்திமூலம் தெரிவித்துள்ளனர்.

சென்றவர்கள் பத்துப்பேர். அவர்களுள் பழைய பாராளுமன்றப் பிரதிநிதிகள் நால்வர். இவர்களுட்படச் சென்றவர்கள் யாவரும் இந்திய மகாநாட்டுத் தலைவர்கள். பொலீசார் குதிரைகளிலே நின்று தடியடி போட்டனர். பலவந்தமாகச் சலன வாகனத்திலேற்றினர் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டுபோய்க் கைதிகளை ஏற்றிச் செல்லும் வாகனத்துள் பூட்டப்பட்டனர், இங்குமங்கும் கொண்டுபோகப்பட்டு மாலை 7.30 மணிக்குக் கனனியில் கொண்டுபோய் விட்டனர். காலை 10 வரை தொடக்கம் மாலை 7-30 மணிவரையில் உட்கொள்ள உணவில்லை. குடிக்கத் தண்ணீரில்லை. மலசலங்கழிக்கவே - அநுமதிக்கப்பட்டது.

இது சூரன் ஆட்சியா துரியோதனன் ஆட்சியா?

என்ன தருமத்தின் பெருமை! கருணைக்கடல் கரைபுரண்டு பாய்கின்றதென்றே சொல்லவேண்டும். எங்கள் பாராளுமன்றப் பிரதிநிதிப் பெருமக்கள் யாவருக்கும் இதிற் பங்குண்டு. அவர்களுள்ளும் இந்தியப் பிரதிநிதிப் பெருமக்களுக்குமிகப்பெரிய பங்குண்டு.

இது பொலிஸ்காரர் செய்தது. பொலீஸ்த் தலைவருக்குத் தெரியாதிருக்கலாம். பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்குத் தெரியாமலிருக்கலாம். மந்திரிமாருக்குத் தெரியாமலிருக்கலாம். பிரதம மந்திரிக்குத் தெரியாமலிருக்கலாம். பாவம்! அவர்கள் என்னசெய்வார்கள்!

அரசியல் அலை

# தோல்வி அடைந்தவருக்கும் சுக்கிர திசை

## ஊர் உலாத்தும் உத்தியோகம்

### மேற் சபை இடங்களும் பேறலாம்

இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னே கேம்பிரிச் சர்வகலாசாலைச் சிரேட்ட கனிட்டப் பரீட்சைகளுக்குத் தோற்றிச் சித்தி அடையாதவர்களும் தோற்றின காரணத்தாலே தகுதியுள்ளவராகக் கருதப்பட்டதும் உத்தியோகம் வழங்கப்பட்டதும் யாவரும் அறிவர். அதேபோன்று இப்போது பாராளுமன்றத்தேர்தலில் அபேட்சகர்களாய் நின்றுவிட்டால் மட்டும் போதும்; வேறெவ்வித அரசாங்க கண்ணியத்திற்கும் அவர்கள் அருகர்கள் ஆகிவிடுவார்கள்.

கொழும்பு மத்திய தொகுதியில் நின்று தோல்வி அடைந்த திரு. குணசிங்க இப்பொழுது இந்துனேசியா நாட்டில் இலங்கைக் காரியாதிகாரியாக நியமிக்கப் பெற்றிருக்கின்றார். மேற்சபையிலே உள்ள சில இடங்களுக்கும் தோல்வியடைந்த பாராளுமன்ற அபேட்சகர்கள் நியமனம் பெறுவார்கள் என அறிகின்றோம்.

### இருதலை இன்பம்

எனவே வேண்டியது ரூபா ஆயிரமும் அதிகாரக்கட்சியின் ஆதரவும். தோற்றாலென்ன வென்றாலென்ன இருவகையிலும் உவகையுண்டு. இப்படியானால் யார்தான் அரசியலில் ஈடுபடமாட்டார்?

இந்த வகையில் மனச்சமாதானம் உண்டாகாதவர்களுக்கு வேறு வழியுமுண்டு. ஆண்டுக்கொருமுறை புதுவருடக் கொண்டாட்டமும் இராணியின் பிறந்த நாள் விழாவும் சூரிய தோற்றம்போல நிச்சய

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். நந்தன ௵ வைகாசி ௴ ௩௧ உ வெள்ளிக்கிழமை


## இலங்கை இந்தியர்கள்

ஆத்ம தத்துவத்தால் அநீதியை அகற்றலாம் என்ற உண்மை தோன்றி நின்று வந்ததாயினும் செய்கை முறையிற் பயன்தரக்கூடியதா என்ற ஐயத்தை நீக்கி அகில உலகத்திற்குமே ஒரு அற்புதத்தைக் காட்டி வைத்த கருணைஉருவான மகாத்மா காந்தி அடிகள் சத்தியாக்கிரகம்என்னும் சாத்விகப் போராட்டத்தைப் பற்றி மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து அதை யார் யார் உபயோகிக்கலாம் என்றும் எவ்வாறு நடத்துதல் வேண்டும் என்றும் அழுத்தம் திருத்தமாக வரைவு செய்ததோடு அதற்கு ஆயத்தப் பிரயத்தனங்கள் பல முன்னரே முயன்று விட வேண்டும் என்றும் கூறிஉள்ளார். உலகம் உவப்ப அரசியலில் ஆத்ம சத்தியின் அபூர்வ தத்துவத்தை அறிந்தபாரதநாட்டிலேயே சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தகாத முறையிற் பலவேறு கட்சியினரும் உபயோகிக்கின்றனர் என்று நேரு அரசாங்கம் தடை உத்தரவு பிறப்பித்திருக்கின்றதை நேயர்கள் இந்தியப்பத்திரிகைகள்வாயிலாக அறிந்திருப்பார்கள். இஃதிவ்வாறிருக்க இலங்கையிலேயுள்ள இந்தியச்சகோதரர்களிற் பல்லாயிரக் கணக்கானோர் தங்கள் வாக்குரிமையை யிழக்க நேரிட்டதும் அத்தன்மையினாலே பாராளுமன்றத்திற் பிரதிநிதித்துவம் இல்லாமற்போனமையும் இந்நாட்டில் ஒரு நெருக்கடியான நிலைமையை உண்டுபண்ணி விட்டது. இந்த அரசியல் அநர்த்தத்தை எங்ஙனஞ் சீராக்கலாமென்று இலங்கை இந்தியத் தலைவர்கள் மாத்திரமன்று இந்நாட்டு அரசியல் அறிஞர்களும் ஆலோசித்து வந்தனர். பாரதநாட்டு அரசியற் பண்பாட்டிலமைந்த ஆத்ம சக்தி இயக்கத்தின் வாயிலாக இலங்கை அரசாங்கத்தாரிடம் இந்தியர்களுக்கு இழந்த வாக்குரிமையைப்பெற்றுவிட இலங்கை இந்திய மகாநாட்டினர் தீர்மானித்தனர். சத்தியாக்கிரகம் என்ற பெயரே சாந்தத்தையும் தன்னை மறந்து தொண்டாற்றும் தன்மையையும், எல்லாவற்றிலும் மேலாக உண்மை கடைப் பிடித்தலையும் குறிக்கும் என்பது சொல்லாதே அமையும். எனவே இந்த இயக்கத்திற்கு ஆரம்ப ஒழுங்குகள் பல செய்யப்பட வேண்டிய தவசியமே! சிறப்பாக அகச்சுத்தக் கிரியைகள் பல வேண்டும்என்று மகாத்மா காந்திஅவர்களே சொல்வதுண்டு.

இலங்கையிலே தேர்தற் காலம் மற்றை நாடுகளிற் போன்று பரபரப்புக்குரிய ஓர் வேளையாகும். இந்தநேரங்களிலே பொதுசனக் கிளர்ச்சி எதுவகையிலும் கட்டுப்பாட்டுக்கடங்காத் முறையில் வளர்ந்து விடுவது கூடும். எனவே சத்தியாக்கிரகப் போராட்டம் பொதுசன அமைதியீனத்தை உண்டுபண்ணுத வகையில்நிறுவப்படவேண்டியதாகின்றது.

பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கோ அன்றிப் பிரதம மந்திரியாருக்கோ விண்ணப்பப் பத்திரத்தைக் கொடுப்பதற்கு ஊர்வலமாவது ஒன்றின்மேற்பட்ட பலர் கூடிப் பொதுசனத்தின் கவனத்தைக் கவரக்கூடிய முறையில் ஓர் பவனியாவது வேண்டியதில்லை. நூற்றொரு அங்கத்தவர்களில் ஐம்பதின்பர் எதிர்க் கட்சியினர் இருக்கிறார்கள். இவர்களில் எவரும் இந்தமனுவைப் பாராளுமன்றத்திலேசமர்ப்பிக்க முடியும். பொதுவாக அல்லல் விளைவிக்காத ஒரு நல்ல வழி இருக்குமேயானல் அறிந்தோ அறியாமலோ ஒரு சச்சரவேற்படக்கூடிய முறையைக் கையாள வேண்டியதில்லையே. கனியிருக்கக் காய் கவர வேண்டுமா?

இலங்கை அரசாங்கத்தினரும் சத்தியாக்கிரகத்துக்குரிய தனிப் பெருந் தகுதியை மறக்கவொண்ணாது. எதுவகையாலும் ஆயுதபாணிகள் என்று சொல்லப்படமாட்டாத சாந்த குழுவினரைப் பயமுறுத்தவோ அல்லது வேறு வகையால் ஊறுபெறச் செய்யவோ அவசியம் இல்லை. சாந்த முறையில் எதிர்ப்புக் கோலங் கொண்ட இலங்கை இந்தியர்களை அவர்களின் இயக்கத்தின் நன்னோக்கத்திற்குத் தக ஆதரவாய் ஒழுங்குறப்படுத்தி விட்டால் [illegible] குறைகூற முன்வரார்.

### இறந்தவர் தேகத்தில் வியர்வை!

கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் இறந்த தெல்லிவளை வாசியான யோசேப்பு என்பவரின உடம்பில் வியர்வை தோன்றியிருப்பதாயும் சுற்றத்தவர்கள் பிரேதத்தைத் தகனஞ் செய்ய முடியா திருப்பதாயும் ஒரு புதினச் செய்தி கிடைத்திருக்கின்றது.

### வெற்றி பெற்றவரின் வீரச் செய்கை

தென் ஆபிரிக்காவிலே நடந்த பொதுத் தேர்தலில் இரண்டு தொகுதிகளிற் சில இடங்களில் வாக்களிப்பதற்குப் போதிய வசதிகளில்லாமையாற் பலர் வாக்களிக்காது திரும்ப நேரிட்டமை சனநாயகத்துக்கு நேர் விரோதமானதென உணர்ந்து வெற்றி பெற்ற இரு இந்தியப் பிரதிநிதிகளும் தங்கள் பதவிகளினின்றும் நீங்கித் திரும்பவும் போட்டியிட முன்வந்திருக்கின்றார்கள்.

### பனையிலிருந்து விழுந்தவரின் பரிதாப மரணம்

சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னட்டி இளையவன் என்பவர் பனைமரத்தினின்றும் தவறி வீழ்ந்தமையாற் பாரதூரமான காயப்பட்டு யாழ்ப்பாண வைத்திய நிலையத்தில் இறந்துவிட்டதாக அறிகிறோம்.

### தொழில் வேண்டுவோர் பதிவுநிலையம்

காங்கேயன் துறையிலிருந்த தொழில் வேண்டுவோர் பதிவு நிலையம் (Employment Exchange) பிரயோசனமற்றதென மூடப்பட்டுவிட்டதாம்! இதற்குக் காரணம் காங்கேயன் துறைச் சீமெந்து உற்பத்திநிலையத்தில் தொழில் கொடுக்கும்பொழுது குறித்த பதிவு நிலையத்தில் பதிந்திருப்பவர்களைப்பற்றி ஆராயாது தொழில்கள் கொடுத்ததெனக் கூறப்படுகின்றது. இந்த முறையீனமான முறை, மக்களிடையே பெரும் பரபரப்பையுண்டாக்குகின்றதென அறிய வருகிறது.

## பொதுத் தேர்தலிற் பல பிழைகள்

### விசாரணைக்குழு வேண்டுமென்கிறது எதிர்க்கட்சி

செவ்வாய்க் கிழமை (10-6-52) மாலை கொழும்பு காலிபேஸ் (Galle Face) என்னுமிடத்தில் எதிர்க்கட்சித் தலைவர்களும் ஆதரவாளர் பெருந்தொகையினருந் திரண்டு திரு பண்டாரநாயக அவர்கள் தலைமையில் ஒரு பெருங் கூட்டங் கூடினர்.

தலைவர் தமது தலைமையுரையில் சென்ற பொதுத்தேர்தலைப்பற்றிப் பேசும்பொழுது, தேர்தலிற் பல பிழைகள் நடந்திருப்பதாகக் கூறி அவற்றை விசாரணை செய்ய ஒரு சபையை அமைப்பது அத்தியாவசியமென்று வற்புறுத்திக் கூறினார். தொடர்ந்து பேசும்பொழுது வாக்குச்சீட்டுப்பெட்டிகளிலிருந்து வாக்குச்சீட்டுகளே காணமற்போய் விட்டதாகவுங் குறிப்பிட்டார்.

திரு. பீற்றர்கெனமன் பேசுகையில் பொதுத்தேர்தல் சனநாயக முறையில் நடத்தவில்லையென்றும் முன்னரே பல பிழையான ஒழுங்குகளைச் செய்துவிட்டுத் தேர்தலை ஒரு கபட நாடகமாக ஐக்கிய தேசியக் கட்சியார் நடித்தனரென்றும், தேர்தல் அதிகாரி உண்மையை மறைக்க முயலுகிறாரென்றுங் கூறினார்.

டக்டர் N. M. பெரேரா, திரு. C. சுந்தரலிங்கம், ஸ்ரீமதி குசுமா குணவர்தன ஆகியோரும் பேசினர். பிழைகள் பல நடந்தேயிருக்கின்றன [illegible] வேண்டுமென்று யாவரும் வற்புறுத்தினர்.

### நிலவரி உண்டாக்க ஆலோசனை

#### நல்லூர்க் கிராமச்சங்க முயற்சி

நல்லூர் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலுக் கருகாமையிலிருக்கும் நல்லூர்வடக்கு ஜனசமூகசேவா சங்க மண்டபத்தில் 14-6-52 சனிக்கிழமை பி. ப. 7 மணியளவில் மேற்படி ஆலோசனையைப்பற்றி - இக் கிராமச்சங்க எல்லைக்குள் வசிக்கும் மக்களுக்கு விளக்கிக் காட்டக்கூடிய தொகையினரின் அபிப்பிராயத்தை - அறியும் பொருட்டு ஷை கூட்டம் கூட்டப்படும் என அறிகிறோம்.

—0—

## அமெரிக்க பள்ளிக்கூடங்களில் நீக்ருரே பிள்ளைகள் நிலைமை

அமெரிக்க பள்ளிக்கூடங்களிலே வெள்ளை மக்களுடைய பிள்ளைகளுடன் நீக்குரோ சாதிப் பிள்ளைகள் படிக்க விடாது தடுக்கும் வழக்கத்தை எதிர்த்து நீக்குரோசாதி பெற்றோர் வழக்குத்தொடர்ந்திருக்கின்றனர்.

நீதிமன்றத் தீர்ப்பை மக்கள் யாவரும் எதிர்பார்த்திருக்கின்றனர்

## வேண்டுகோளுடன் சென்ற இலங்கைஇந்தியர்

பாராளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் தங்களைப்பற்றிக் கவனிப்பார்களெனக் காத்திருந்த இலங்கை இந்தியர் அரசாங்கம் பாராமுகமாயிருப்பதைப் பார்த்துவிட்டுத் தங்கள் வேண்டுகோளுடன் திங்கட் திங்கட்கிழமை (9-6-52)காலையில் பிரதமருடைய காரியாலயத்துக்குச் சென்ற வழியில் பொலீசார் குறுக்கே வந்து துன்பம் விளைத்தனர். அவர்களைச் சலன வண்டிகளில் ஏற்றி அவர்கள் அறியாத இடங்களில் கொண்டுபோய் விட்டனராம்.

இதுவே பௌத்த தருமமாம். இதற்குச் சைவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய ஆசீர்வாதங்களுமுண்டு.

## ருஷியாவின் நூதன முறைகள்

ருஷியாவிலேயிருக்கின்ற புறநாட்டு அரசாங்கப் பிரதிநிதிகள் மொஸ்கௌ நகரிலிருந்து 25 மைல் தூரத்துக்கப்பால் பிரயாணஞ் செய்யக்கூடாதென்றும் அப்படிச் செய்யவேண்டுமானால் அதிகாரிகளுக்கு அறிவித்தே செல்லவேண்டுமென்றும் வேறு சில இடங்களுக்கு எவ்வாற்றானும் போகமுடியாதென்றும் அக்கட்டுப்பாடு இந்தியப் பிரதிநிதிக்குமுண்டென்றும் இந்திய பாராளுமன்றத்திலே கேள்விகளுக்கு விடை கொடுக்கும்பொழுது பிரதமர் பண்டித நேரு அவர்கள் கூறினார்.

இந்தியாவிலிருக்கிற ருஷிய பிரதிநிதிக்கும் அத்தகைய கட்டுப்பாடு உண்டாக்கக்கூடுமோவென்று கேட்டபொழுது அவ்வாறு செய்யப்பட மாட்டாது என்று விடை இறுத்தார். இது இந்திய முறை, அது ருஷிய முறை.

திரை மறைவென்பது நிறையுடையது.

## செய்தித் திரட்டு

=0=

கிழக்கு வங்க சட்ட சபையில் புத்த சமய மக்கள் பிரதிநிதிகளாக இருவருக்குப் பாகிஸ்தான் அரசாங்கம் இடங்கொடுத்திருக்கின்றது. அங்கே 300,000 புத்த மக்கள் வசிக்கின்றனர்.

X X X

கப்பல்கள் வராமையால் காங்கேயன்துறைத் துறைமுகத்தில் வேலை செய்யும் தொழிலாளர் வேலையின்றியிருக்கின்றனர். இவர்கள் வேறு எத்தொழிலுமில்லாதவர்களாய் வருந்துகின்றனர்.

X X X

இலங்கை இந்தியர் பிரசா உரிமையைப்பற்றி இலங்கை இந்திய மகாநாட்டார் எழுதிய பத்திரம் பிரதம மந்திரிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

## இறந்த மனிதன் திரும்பவும் உயிர் பெற்றான்

ஜபல்பூர் என்னும் இடத்தில் அழகுதியார் என்னும் 40 வயதான மனிதன் ஒருவன் நெடுகாலமாகக் காசநோயினால் பீடிக்கப்பட்டிருந்தான். சென்ற சனிக்கிழமை இவனது உயிர் அடக்கத்தல் இருந்தது இவனுடைய இனத்தவர்கள் இவன் இறந்துவிட்டதாக எண்ணி இவனுக்குச் செய்யவேண்டிய சமக் கிரியைகளைச் செய்து ஈற்றில் இவனைச் சுட்டெரிக்கும் பொருட்டு சாபடா என்னும் இடத்துக்குக் கொண்டு சென்றார்கள்.

மயானத்தில் இவனுக்குத் தங்கள் கடைசி மரியாதையைச் செய்ய எத்தனிக்கும் பொழுது இவன் நித்திரையினின்றும் எழும்புபவன்போல் எழுந்து மரணத்தினின்றும் தப்பினன்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

காரைதீவு மேற்கு காத்திகேசு கைம்பெண் வள்ளியம்மை

வழக்காளி,

இல. 7297 Vs

காரைதீவு மேற்கு கந்தர் கணபதிப்பிள்ளை கைம்பெண் பாறுபதி, இவ காலஞ்சென்ற தனது புருஷன் கந்தர் கணபதிப்பிள்ளையின் ஆதனத்துக்குத் தத்துவகாறி

எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 7297-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1952-ம் ஆண்டு ஆடி மாதம் 5-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1179-50 இதில ரூபா 1000-00க்கு 21-11-50 தொடக்கம் 13-2-51 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு ஆறுவீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் 13-2-51 தொடக்கம் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு ஐந்து வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 20.91.

காணி விபரம்

காரைதீவுக் கோயிற்பற்று தங்கோடை இறை வில்லெழுவை சேவையர் படத்தின்படி நெற்பரப்பு 12 குளி 5½ எல்லை கிழக்கு சண்முகம் கந்தையா வடக்கு கந்தையா பெண் சரஸ்வதி மேற்கு இராமனாதர் ஆறுமுகம் தெற்கு தில்லையம்பலம் முருகேசு இந்நான்கெல்லைக்குட்பட்ட காணியடங்கலும்.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah.
கொம்மிஷனர்.

காரைநகர்
4-6-52.

M. 39 13—6—52.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதியுள்ள ஆசிரியர்களை அரசாங்கம் நியமிக்கத் தயங்குவதேன்?

## தகுதியறியும் விசாரணைக் குழு அமைக்கும் விபரீதம்!

இன்றைய இலங்கையின் கல்வி நிலையைப்பற்றிச் சிரத்தை காட்ட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தை மாத்திரஞ் சார்ந்ததன்று. பொது மக்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினரைக் கொண்ட அரசாங்கம் தனது கடமையைச் சரிவரச் செய்யத் தவறுமானால் அரசாங்கத்தின் உறுப்பினராக விளங்கும் குடியானவன் ஒருவனும் அரசாங்கத்திற்கு அவர்கள் செய்யுந் தவறுகளை எடுத்துக் காட்டும் உரிமையுடையவனாகின்றான்.

இலவசக் கல்வித் திட்டமெனக் கூறப்படுந் திட்டம் வகுக்கப்பட்ட பின்பு இலங்கையிலுள்ள சுய மொழிப் பாடசாலைகளனைத்தும் ஆரம்ப பாடசாலைகளாயின. ...... ஆங்கிலமே இலங்கையின் அத்தியாவசிய மொழியாக்கப்பட்டுள்ளது. இது மூற்றிலும் உண்மை. ஆங்கிலம் ஒரு பாடமாகப் படிப்பிக்கப்படுவதைத் தவறென ஒருவருங் கருத முடியாது. ஆனால் உயர்நிலைப்பள்ளிகளில் எல்லாப் பாடங்களுமே ஆங்கிலத்தில்தான் சொல்லிக் கொடுப்பது மேலென மதிப்பதுடன் தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் மொழியைச் சரிவரத் தெரிந்துகொள்ளும் முறையில் கற்பிக்கப்படாமை ஒரு பெருங் குறையாகும்.

1950-ம் ஆண்டு நடந்த ஒன்பதாம் வகுப்பு மாணவர்களின் தேர்வு பற்றி ஆராய அரசாங்கம் ஒரு குழுவினை நிறுவியது. அவர்கள் பல காலஞ் செய்த ஆராய்ச்சியின் பயனாக 19–5–52ல் ஒரு அறிக்கையை வெளியிட்டனர். அவ்வறிக்கையைப் படிப்பதன்மூலம் மாணவர்களின் தாழ்வுக்குத் தகுதிபெற்ற ஆசிரியர்களில்லாமையே காரணமென்பதைச் சொல்லாமலே தெரிந்துகொள்ள முடியும். விசாரணைக் குழுவின் அறிக்கை என்ன கூறுகிறது? அநேக தேர்வு நிலையங்களில் தோற்றிய மாணவர்களிற் பெரும்பகுதியினர் தங்கள் ஆங்கில வியாசங்களில் ஒரு வசனங்கூடப் பிழை விடாமல் எழுத முடியவில்லை எனக் கூறியுள்ளது. அது தமது சொந்த மொழியின்மையால் உத்தியோகமொன்றிற்காகவன்றி மற்றெந் நோக்கங் கொண்டும் ஆங்கிலத்தை மாணவர்கள் விரும்பாமையால் ஆங்கிலமாகிய பிறமொழியில் பிழைவிட நேரிடுவதால் தீமையொன்றுமில்லை. ஆனால் தமிழ் மொழியையே தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களால் தமிழ் மொழியைச் சரிவரத் தெரிந்துகொள்ள முடியவில்லை என்று கூறும்படி நேர்ந்தமைதான் வெட்கப்படுதற்குரியதாகும்.

### தமிழின்தரம்பற்றி விசாரணைக்குழுவின்கூற்று:—

தேர்வில் தோற்றுவதற்குத்தகுதியற்ற சில மாணவர்கள் தேர்வுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இலக்கணத் தமிழ் அவர்களால் எழுத முடியவில்லை. அவர்களுக்குப் போதிய இலக்கண அறிவுமில்லை. இலக்கணப் பிழையின்றி அவர்களால் வாக்கியங்கள் அமைக்க முடியவில்லை. அவர்களிற் பெரும்பாலோருக்கு எழுத்துப் பிழையின்றி எழுத முடியவில்லை. எனக் கூறுகின்றது. இக்கூற்று ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் இலக்கண அறிவு பெற்ற தமிழாசிரியர்கள் இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது! உயர்தர வகுப்புக்களில் இலக்கண இலக்கியத்தில் அநுபவம் வாய்ந்த ஆசிரியர்களை அரசினர் பாடசாலைகளில் நியமிக்க அரசாங்கம் விரும்பவில்லை. அன்றி உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளிலும் தகுதியுடைய தமிழாசிரியர்களைத்தான் நியமிக்கவேண்டுமென அரசாங்கம் வற்புறுத்தவுமில்லை. தகுதியுடைய தமிழாசிரியர்களை ஆங்கில உயர்நிலைப் பள்ளிகளில் நியமிப்பதன் மூலமே மாணவர்களின் தமிழறிவின் தரத்தை உயர்த்தமுடியுமென்பதைப் பொருளையும் காலத்தையும் செலவிட்டதன் மூலம் விசாரணைக் குழுவினர் கொடுத்த அறிக்கையைக் கண்டபின்பாவது அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

வித்துவான்,
த. வடிவேலு அவர்கள்
உதவியது.

விசாரணைக் குழுவின் அறிக்கையில் 'வினாப் பத்திரங்களிலுள்ள சொற்களும் பிழையாகவே எழுதப்படுகின்றன' எனக் கூறப்பட்டிருப்பதை நோக்குமிடத்து வினாத் தாள்களை ஒழுங்கு செய்த ஆசிரியர்களோ அன்றி அதிகாரிகளோ நன்றாகத் தமிழறிந்தவர்களாகவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

ஆசிரிய பயிற்சிப் பாடசாலையில் தமிழ் கற்பிக்கும் தமிழாசிரியர்களும் இரண்டாண்டு பயிற்சி பெற்றவர்களாகவே இருக்கின்றனர். (இரண்டு பயிற்சிப் பாடசாலைகளில் மாத்திரம் பண்டிதர்கள் உள்ளனர்.) அவர்கள் தாமே சரிவர இலக்கண இலக்கியத்தை அறிந்துகொள்ளாத நிலையில் இலக்கண இலக்கியத்தை ஆசிரியராகப் பயிற்சி பெறுவோருக்கு எப்படித்தான் கற்பிக்க முடியும்? எனவே ஆசிரிய பயிற்சிப் பாடசாலைப் படிப்பும் தமிழறிவூட்டுங் கல்வியாக இல்லை என்பதுண்மை. இலங்கையில் ஆசிரிய தராதரம் பெறுவதானால் இரண்டு மாத காலத்துள் அவ்வகுப்பிற்குரிய பாடங்களை ஆயத்தப்படுத்திவிடலாம். அதற்குப் பிற ஆசிரியர்களின் உதவியும் தேவையில்லை. இது எனது சொந்த அநுபவம். இதற்கப்பால் பயிற்சிப் பாடசாலைப் படிப்பைப்பற்றிச் சொல்லாமலே விளங்கும்.

தமிழ்க் கல்விக்கெனவே குறைந்தது நான்காண்டுகளைச் செலவிட்டுத் தமிழிலக்கிய இலக்கணங்களையும் வேறுபல பாடங்களையும் ஒரு அளவில் கற்றுத் தேறிப் பல்கலைக் கழகத்தினரால் வித்துவான் பட்டம் வழங்கப்பட்ட ஆசிரியர்களைத் தகுதியுடைய தமிழாசிரியர்களாகக் கருத அரசாங்கம் மறுக்கின்றது. இது அரசாங்கத்தின் தவறாகாது. அறியாமையே காரணமாகும். அவ்வறியாமையை நீக்க நாம் முயற்சி செய்தல் வேண்டும் அப்பொழுது, தன் மொழியின் சிறப்பைத் தமிழனறிவான். அடிமை மனப்பான்மை மாண்டொழியும்.

### கல்விப் பகுதியினருக்கு வேண்டுகோள்:—

பல்கலைக் கழகங்களிலிருந்து வெளிவந்த தமிழ் வித்துவான்கள் தமிழறிவில் திறமை பெற்றவர்கள் என்பதனை ஒப்புக்கொண்டு, அவர்களுக்கு உயர்வான சம்பளமளிக்குமாறும், தகுதியறிந்து இடமளிக்குமாறும் ஆசிரிய பயிற்சிப் பாடசாலைகளிலும் தகுந்த தமிழாசிரியர்களை நியமிக்குமாறும் வேண்டுகிறேன். இவற்றை நிறைவேற்றினால் 19-5-52ல் விசாரணைக் குழுவினர் வெளியிட்ட குறையும் நீங்கும். தமிழ் மாணவர்களின் தரமும் வருங்கால வாழ்வும் உயர்வடையும். அதை விடுத்து வித்துவான்களைத் தகுதியற்றவர்களென மதிக்குமானால் அரசாங்கக் கல்விப் பகுதியில் தமிழறிந்தோர் இல்லை என்பதை விளக்குவதாகவே முடியும் என்பதனையுணர்ந்து இனிமேலாவது இந்தியப் பல்கலைக் கழக வித்துவான்களுக்கு இடமளித்து அரசாங்கம் தமது தவறை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டுமென வேண்டுகிறேன்.

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு பெ. கா தாமோதரம் பிள்ளை கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் கீழ் விபரிக்கப்படும் நகைகளை 28-6-52 சனிக்கிழமை காலை 10 மணிதொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| நம்பர் | உ. மீ ஆ | கொடுத்த ரூபா | ஊர் பெயர் | நகை விபரம் |
|---|---|---|---|---|
| 306 | 9—4—51 | 19 | இடைக்காடு மேற்கு சின்னையா வேலுப்பிள்ளை | இமி. சி. வெ. கல் தோடு சோடி 1 |
| 4314 | 10—4—51 | 30 | சஞ்சுவான் கோவிலடி செல்லப்பா இராசேந்திரம் | இமி கல்.தோடு சோடி 1 |
| 4447 | 30—4—51 | 20 | கடைத்தெரு No 160 பொன்னையா சண்முகராசா | இமி, சி. வெ.கல் தோடு சோடி 1 |
| 4456 | 2-5—51 | 10 | மானிப்பாய் வடக்கு தியாகராசா நாகேந்திரம் | இமி. கல் மூக்குத்தி 1 |
| 4484 | 8—5—51 | 130 | மானிப்பாய்தெற்கு வயித்திலிங்கம் செல்லரத்தினம் | முத்துகட்டியதோடு சோடி 1 |
| 4526 | 16—5—51 | 210 | சிவியாதெரு கதிரவேலு தம்பையா | ரேடியோ காப்பு சோடி 1<br>இமி கல் புரூச் 1 |
| 4551 | 26—5—51 | 30 | கொழும்புத்துறை சபாபதி செல்லத்தம்பி | தாலி 1 |
| 4559 | 28—5—51 | 60 | சுந்தரோடை கந்தையா ஆறுமுகம் | சிகில் மோதிரம் 1 |

ஏல விற்பனவு 1952 ஆ. ஆனி மீ 28 உ சனிக்கிழமை.

வண்ணார்பண்ணை,
12-6-52.

சி. பசுபதிச் செட்டியார்
வெர்தீஸ் மேஸ்தர்.

( M. 40 13—6—52. )

திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்
திறமான ருணி ஓடுகள் 13½, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2

## உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 15—6—52——21—6—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இவ் வாரத்தில் மன அமைதியிராது. முக்கியமான மாற்றங்கள் சில ஏற்படக்கூடும். சிநேகிதர், சகோதரர் முதலியோரால் நன்மையுண்டு. தகுதிமுதியோரால் அங்கீகரிக்கப்படும். குடும்பநன்மதிப்புண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இவ் வாரத்தில் முக்கிய மாற்றங்கள் எதுவுஞ் செய்ய வேண்டாம். கிரமமாய் இருந்தால் சில நன்மைகள் ஏற்படும். அரசாங்க உதவிகளும் பிறரின் சரீர உதவிகளும் உண்டு. பழைய வேலைகள் இவ் வாரத்திற் செய்து முடிக்கலாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

சில சங்கத் தொடர்புகள் இவ் வாரத்தில் உண்டாகும். வீட்டு விஷயங்கள் காரணமாக மனச் சிக்கல் ஏற்படும். எவ்வளவு பணம் சம்பாதித்தாலும் வார முடிவுக்குள் அவை வியர்த்தமாய்விடும். புதுத் தொடர்புகளை நீக்கிக் கிரமமாய் இருத்தல் வேண்டும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

இவ்வாரத்தில் முக்கிய [illegible]களை நன்றாக ஆராய்ந்து [illegible] செய்தல்வேண்டும். வீட்டுத் தொல்லைகள் சிலஉண்டு. பணலாபமுண்டு மிகுதியிராது. சிலமாற்றமுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

வாரத்தில் முதல் இரண்டு நாட்களும் நன்மைபயவா. ஆனால் மிகுதி நாட்கள் அநுகூலமானவை குடும்ப நன் மதிப்பும், மனச் சந்தோஷமும் பிள்ளைகளால் உண்டு புது முயற்சிகளில் அநுகூலமும் மனக்களிப்பும் உண்டு.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

மிக உற்சாகமான வாரம். செவ்வாய், புதன், வியாழன் முதலிய நாட்களில் கவனமாய் இருத்தல் வேண்டும். வீட்டுத் தொல்லைகளும், பணக் கஷ்டமும் உண்டு. வாரப் பிற்பகுதி முற்பகுதியிலும் அநுகூலமுடையது

**துலாம** சித்திரை 3,4ம்பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

வார முற்பகுதியில் பணலாபமுண்டு. வியாழன் மாலையும், வெள்ளியும், சனியும், காரியாலயத் தொல்லைகளுண்டு. பிறருடன் வாதாடுவதை நிறுத்தி மனதை அடக்கி வைத்திருத்தல் வேண்டும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் [illegible] இவ்வாரம் [illegible]ண்டு. ஆனால் அவை வாரமுடிவுக்குள் நீங்கிவிடும். சிநேகிதரால் மன அமைதியின்மை ஏற்படும். காரியாலய அபவாதம் சில உண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.

உத்தியோகத்திற்கோ அல்லது, வியாபாரத்திற்கோ இவ்வாரம் மிகவும் நன்று. ஆனால் குடும்பத்தில் சிலர் சுகவீனமடைவர், புது முயற்சிகள் அதிக நேரத்தைப் பாதிக்கும். வார இறுதியில் கஷ்டமுண்டு.

**மகராராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இவ்வாரத்தில் ஆண்கள் பெண்களுடனும், பெண்கள் ஆண்களுடனும் சாவதானமாகப் பழகுதல் வேண்டும். குடும்பத் தொல்லைகளுண்டு. எதிரிகளால் அநேக பழிச்சொல் ஏற்படும். வார இறுதி நன்மை பயக்கும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4 பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

மிகக் கடினமான வாரம். சாதுரியமாயிருந்தால் போட்டியில் வெற்றி நிச்சயம். முக்கிய கருமஞ் சிலவற்றில் மனஞ் செல்வது கடினம். வார இறுதி நன்மை தரும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

உணர்ச்சியுள்ள வேலைகள் இவ்வாரத்தில் செய்து முடிக்கலாம். அநுகூலமான உத்தியோக மாற்றங்கள் அல்லது உயர்வுகள் உண்டு. பூமியினால் லாபமும் வாகன லாபமும் வார இறுதியில் உண்டு.

## அரசியல் அலை

( முதற் பக்கத் தொடர்ச்சி )

மானவை. இவர்தானுமா அரசாங்க சபை குறைந்துவிடும்?

சுதந்திர இலங்கையிலும் ஆங்கிலேய நாட்டிற் போல் பரம்பரைப் பட்டவர்த்தனப் பிரபுக்கள் வர்க்கம் ஒன்று உண்டாகக் கூடாது என்று இத்தகைய மனப்பான்மையுடையவர்கள் பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

தேர்தல் நடக்கும்போதும் வெற்றிபெறும் வேளையிலும் உபசாரணைக் காலத்திலும் பூமாலைக்காரருஞ் சங்கீதக்காரருக்கும் ஒரே ஆனந்தம். அது முடிந்தாற் பட்டதாரிகளின் கொண்டாட்டத்திலும் இவர்களுக்கு மனப்பூரிப்பு. இது இங்கே.

ஆனால் உடல் பொருள் ஆவி அர்ப்பணத்தாற் சுதந்திரமடைந்த இந்திய நாட்டில் பூமாலையுஞ் சங்கீதமும் ஆலயங்களுக்கே உரியன என்பதை இங்குள்ளோர் அறிவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறமும் மறமும் கடந்த அரன் அன்பு

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

மெய்யறிவினிடத்து விரிந்து விளங்கும், பற்றற்ற தூய அகண்டித அன்பு, குழந்தையின் நலனை விழையும் தாயன்பையும் நோயாளியின் பிணியை நீக்க முனையும் வைத்தியனின் பரிவையும் ஒத்தது. தாய் தன் குழந்தையின் தன்மைக்கேற்ப அதனைப் போற்றியும் பாராட்டியும், தண்டித்தும், கண்டித்தும் அதனை நல்வழிப்படுத்துவதிலேயே கருத்தூன்றுகிறாள். தாயின் கோபமும் கண்டிப்பும் தண்டனையும் குழந்தையின் தன்மையிற் சார்ந்தெழும் போக்கினால் நிகழ்வன வன்றிப் பகைமையினாலோ, வெறுப்பினாலோ நிகழ்வன வல்ல. தன் குழந்தைக்கு வேண்டியன செய்து மகிழ்விக்கும் தாயே, அது அறியாது செய்யும் விஷமங்களையும் அடையுந் தீமைகளையும் நீக்க வேண்டி, அடித்தும் வைதும் துன்புறுத்துகின்றாள். தன் குழந்தை, எங்கு கெட்டு விடுமோ எனும் அன்பின் துடிப்பே, தாயின் மறச் செயலிற்குக் காரணமாகும். நோயின் கொடிய அவஸ்தையைத் தணிக்கவே, வைத்தியன் பிணியாளியைப் பட்டினி மருந்து சத்திர சிகிச்சை முதலியவற்றாற் துன்புறுத்துகின்றான். தாயின் கருணையும், வைத்தியனின் பரிவுமே, குழந்தையையும் பிணியாளியையும், தண்டிக்கும், துன்புறுத்தும் மறச்செயலுக்குக் காரணமாகும். இன்பமாகிய பலனை நோக்காது, உயிர் நலமொன்றையே நோக்கி எழுவது இப்புனித அன்பு. அறம் மறம் எனும் பாகுபாடின்றி, ஆன்ம உய்தியில் மலர்வது இவ்வுண்மை அன்பு. அதன்பேறு, இன்ப துன்பமன்ற மனச்சாந்தியே. குழந்தையின் நலன் தாய்க்கும், நோய் நீக்கம் வைத்தியனுக்கும், பெருஞ் சாந்தி தருகின்றன. குழந்தையும் நோயாளியும் அடையும், இன்ப துன்பங்களைத் தாயும் வைத்தியனும் நோக்குவதில்லை. அவர்களின் கேடு நீக்கமும் நல்லாக்கமுமே இவர்கள் வேண்டுவது. இதுவே முற்றுமுணர்ந்த மெய்ஞ்ஞானிகளிடத்து விளங்கும் அகண்டித அன்புமாகும். உயிரின் பந்த நீக்கமே, அருட்பெரியாரது தூய அன்பின் துடிப்பாகும்.

## அன்பின் துறவி

நமக்கு இன்பமும் மகிழ்வும் தரும் அறச் செயலையே அன்பின் விளைவாக நாம் எதிர்பார்க்கிறோம். துன்பமும் வெறுப்புந் தரும் மறச் செயலாகிய வன்கண்மையும் அவ்வன்பின் விளைவே யென்பதை நாம் உணர்வதில்லை. அதனைப் பகைமையின் விளைவாகவே கருதுகின்றோம். நாம் துன்புறும்போது, கடவுளிடத்துக்கூடக் குரோதமும் வெறுப்பும் பாராட்டத் தவறுவதில்லை. இது பெரும் அறியாமை என்பதை, எமது மூதறிஞர், எத்தனையோ வகையாக எமக்கு உணர்த்தியுள்ளார்.

"அடித்தடித்து அக்காரம் தீற்றிய அற்புதம் அறியேனே" எனவும், "கிங்குறி தப்பின் — புளியம் வளாரல் மோதுகிற பய்" எனவும், இது போன்ற பற்பல உண்மைகளால், தெய்விகத்தின் அகண்டித அன்பைத் துய்த்துணர்ந்த, நம் அருட் தலைவர்கள் ஒவ்வொருவரும், உண்மை அன்பின் வெற்றியை நமக்கு உணர்த்திப் போந்தனர். அவர்களது வாழ்க்கையும், அதனை நமக்குத் தெளிவாக்கத் தவறியதில்லை. மறத்தின் விளைவாகிய துன்பமும அன்பின் நெகிழ்வே. அண்மை அன்பு, அறம் மறம் எனப் பாகுபடுத்தும் வரம்பிறகு அப்பாற்பட்டது. வரம்பு கடந்த பூரண அன்பிற்கு ஆட்பட்ட அடியாரனைவரும், இவ்வுண்மையைச் சாதித்துப் பெருஞ் சாந்தி அடைந்தனர்.

## அன்பின் முதிர்ச்சி

மெய்யன்பின் முதிர்ச்சி அடைந்த அருளாளர் அறம் மறமெனும் வேற்றுமை நோக்கற்றோர். அறத்தின் வழியோ மறத்தின் வழியோ உயிரறிவை ஆட்கொள் புரிவதே அவரது கருணை. நமக்கு அது இன்பமாயினும் துன்பமாயினும், நாம் விரும்பினும் வெறுப்பினும், மறுப்பினும் புலம்பினும், அவர் நம் நலனோம்பும் தம் பணியை விடுவாரல்லர். மறுகுங் குழந்தையின் மாசுபோக்கிப் புனிதமாக்கும் தாயாகியும், கதறும் நோயாளியின் புண்ணை அறுத்து ஆற்றும வைத்தியனாகியும் நிற்பவர் அறமும் மறமும் மற்ற அப்பேருளாளர். தன்னை அணுகுவோரைத் துன்ப அனுபவத்துள் ஆழ்த்தி உண்மை தெரிப்பதிற் பெருமிதங் கொள்வது, இவரது அதீத அன்பு.

திருப்பெருந்துறையிற் குருவடிவங் கொண்டமர்ந்து, மணிச் சிவிகைமீ திவர்ந்து போந்த வாதவூரரின், மந்திரிப் பதவியையும் வாண் பொருளையுங் கவர்ந்துகொண்டு, மன்னனின் சிறைத் தண்டனைக்காளாக்கிய கருணைக்கு அறமேது? மறமேது? வலிந்தெமைத் தேடிவந்து பரிந்தெமை ஆட்கொள்ளுந் தாயாகி, அடித்தடித்தக்காரந் தீற்றும், அருட்குரு நாதரின், அறமும் மறமும கடந்த ஈடிணையில்லா அகண்டித அன்பிற்குள், நாமனைவரும் ஆழ்ந்து புனித மடைவோமாக. அவனருளை வேண்டுவோம்.

## முத்துக்குளிப்பு

தூத்துக்குடிக்கும் இராமேஸ்வரத்துக்குமிடையிலுள்ள கடற்கரையிலே முத்துச் சிப்பிகள் வளர்கின்றனவென்று கண்டுபிடித்துச் சென்னை அரசாங்கத்தார் அங்கே முத்துக்குளிப்புத் தொழிலைத் தொடங்க ஆலோசித்திருக்கின்றனர்.


○ நீங்கள் இளமைப்பருவத்தை அடைய
சி. எம். சாமி




உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.
அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல் வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும. நீரழிவு, பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0

குருபஸ்பம் (தொய்வுக்கு)

தோய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும்.
அருமையானது
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனும்)

M. 16. 25-4-52—25-10-52.

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கோன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து எற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.


உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்புமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியசெக்கோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

# "பத்திரானஸ்"

இதுவே அருந் தருணம்!



உங்கள் கண், பல் என்பனவற்றைச்
சோதிப்பிக்கத் தவறாதீர்கள்

சோதப்பித்துச் சிகிச்சை செய்தற்காகிய இந்தத் தருணத்தைத் தவற விடாதீர்கள். எங்கள் நீண்டகால அநுபவமும் சேவையும் உங்களைப் பூரண திருப்திப்படுத்தும் தற்கால சாஸ்திரீய உபகரணங்கள எங்கள் வசம் இருக்கின்றன. மேலும் எங்களிடமுள்ள அழகிய புது மாதிரியான செயற்கைப் பல்வரிசைகள் நீடித்தகாலம் நின்று பிடிக்கக்கூடியன என்பதை உங்களுக்கு அறிவிக்கின்றோம்.

போன் இல. 271
(கிளைத்தாபனம்)
22, கண்டிறோட், குருநாகல்.
111, முதல் டிவிஷன், மருதானை.

"பத்திரானஸ்"
தந்த நயன வைத்தியசாலை
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்

PATHIRANAS
Dental Laboratory & Optical Works
28, Main Street, Jaffna

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE




நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday June 13. 1952.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org